**G** Reg. No. | | | | | | | |

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2019

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

## தமிழ்

**(செய்யுள், உரைநடை)**

**அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.**
**2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.**

### பகுதி – I

**1) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14 x 1 = 14**

**2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. மண்ணுக்கு வளம் சேர்ப்பன அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
2. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை : அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
3. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடையை தேர்வு செய்க.

| | |
|---|---|
| 1. விரியன் | i) தண்டை |
| 2. திருகுமுருகு | ii) காலாழி |
| 3. நாங்கூழ்ப்புழு | iii) சிலம்பு |
| 4. குண்டலப்பூச்சி | iv) பாடகம் |

அ) 1-iii, 2-iv, 3-ii, 4-i ஆ) 1-iii, 2-i, 3-iv, 4-ii இ) 1-iv, 2-iii, 3-ii, 4-i ஈ) 1-iv, 2-i, 3-iii, 4-ii

4. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) அ. முத்துலிங்கம் – யுகத்தின் பாடல் இ) சு. வில்வரத்தினம் – ஆறாம் திணை
ஆ) பவணந்தி முனிவர் – நன்னூல் ஈ) இந்திரன் – பேச்சுமொழியும் கவிதை மொழியும்
5. காவடிச்சிந்தின் தந்தை : அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
6. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?
அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை
7. செங்கயல் – இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) உரிச்சொற்றொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
8. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை அ) செப்பலோசை ஆ) அகவலோசை இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை
9. Touch Screen – என்பதன் தமிழ்ச்சொல் அ) திறன்பேசி ஆ) சுற்றறிக்கை இ) தொடுதிரை ஈ) நுண்கலைகள்
10. உடம்படு மெய்களாக வரும் மெய்யெழுத்துக்கள் : அ) க், ச் ஆ) ர், ழ் இ) ய், வ் ஈ) த், ப்
11. கீதாஞ்சலி என்ற கவிதை நூலுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) தாகூர் ஈ) பிரபஞ்சன்
12. 'சந்தோஷம்' என்ற பிறமொழிச் சொல்லின் தமிழாக்கம் அ) மகிழ்ச்சி ஆ) ஆண்டு இ) உண்மை ஈ) உறுதிமொழி
13. சுடச்சுட – என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) பண்புத்தொகை ஆ) அடுக்குத்தொடர் இ) வினைத்தொகை ஈ) உருவகத்தொடர்
14. யானை டாக்டர் – என்னும் சிறுகதையின் ஆசிரியர்
அ) புதுமைப்பித்தன் ஆ) பிரபஞ்சன் இ) ஜெயமோகன் ஈ) சி.சு. செல்லப்பா

### பகுதி – II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** **3 x 2 = 6**

#### பிரிவு – I

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
17. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள் – எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?
18. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

#### பிரிவு – II

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 2 = 4**

19. ஐந்து வேளாண்மை மந்திரங்களை எழுதுக.
20. ஆனந்தரங்கலின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
21. தாமஸிகம் என்றால் என்ன?

#### பிரிவு – III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** **7 x 2 = 14**

22. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எத்தனை? அவை யாவை?
23. ஏதேனும் ஒன்றிற்கு உறுப்பிலக்கணம் தருக. அ) பிரிந்தோர் ஆ) துய்த்தல்
24. ஏதேனும் ஒன்றிற்கு புணர்ச்சிவிதி எழுதுக. அ) நீரோடை ஆ) சிறுகோல்

25. அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.
அ) அறிவைத் தேடிப் போகுமிடம் ; உலகம் அறிய உதவுமிடம் (அகம்) ..........
ஆ) வந்தால் மகிழ்ச்சி இது ; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) ............

26. விகுதிகள் எவற்றை உணர்த்தும்?

27. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும். அறிவில்லாதவன்

28. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக. முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

29. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.

30. கலைச்சொல் எழுதுக. அ) Document ஆ) Agreement

## பகுதி – III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **2 x 4 = 8**

### பிரிவு – I

31. சு. வில்வரத்தினம் பாடத்தாள் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
33. புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை?
34. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

### பிரிவு – II

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 4 = 8**

35. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?
36. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
37. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
38. மதிப்புக் கூட்டுப் பொருள் என்றால் என்ன?

### பிரிவு – III

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 x 4 = 12**

39. வேற்றுமை அணி **(அல்லது)** பிறிது மொழிதல் அணியை விளக்கித் தகுந்த குறட்பாவுடன் பொருத்திக் காட்டுக.

40. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏதேனும் மூன்று நயங்கள் மட்டும்)

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன் ;
மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.

கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை யற்றிடும் காணீர்.

– பாரதியார்.

*TEN*

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

42. தமிழாக்கம் தருக.
1. Education is the most powerful weapon, which you can use to change the world.
2. Looking at beauty in the world, is the first step of purifying the mind.
3. An eye for an eye only ends up making the whole world blind.
4. You must be the change you wish to see in the world.

43. அச்சுப்படி திருத்துபவரின் பணிகளை எழுதுக.

## பகுதி – IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3 x 6 = 18**

44. அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க. **(அல்லது)**
ஆ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரண பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

45. அ) இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன – கூற்றினை மெய்ப்பிக்க. **(அல்லது)**
ஆ) 'கல்லும் கதைசொல்லும்' – என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**
ஆ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

## பகுதி – V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **2 x 4 = 8**
அ) ஏடு தொடக்கி வைத்து – எனத் தொடங்கும் பாடலை எழுதுக. 4
ஆ) தாளாற்றி எனத் தொடங்கும் குறளை எழுதுக. 2